செ.வெ.எண்:16/ஜூலை நாள்: 15.07.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தணிக்கை

தேர்தல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிட்டங்கியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த காலாண்டு தணிக்கை (Quarterly Inspection) இன்று (15.07.2020) மேற்கொண்டார்.

2019-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலின் போது இராமநாதபுரம் மாவட்டத்தில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இராமநாதபுரம் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிட்டங்கியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பு மையம் இரட்டை பூட்டு முறையில் (Double Lock) சீல் வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 24 மணி நேரமும் சுழற்சி முறையில் ஆயுதம் ஏந்திய காவல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த காலாண்டு தணிக்கை மேற்கொண்டார். பாதுகாப்பு மையத்திற்கு வைக்கப்பட்டுள்ள முத்திரை (Seal), சிசிடிவி கேமரா செயல்பாடு, பாதுகாப்பு பணியில் ஈடுபடும் காவலர்கள் பதிவேடு, தீயணைப்பான் (Fire Extinguisher) காலாவதி நாள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர் என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப. உட்பட வட்டாட்சியர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**